Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 100/2018

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : காளிமுத்து | Father/Husband Name | : முருகன் |
| Age | : | Calling | : |
| Date | : 09.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09 day of 03.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

எதிரி ஆஜர்

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தற்போது திருவாதவூர், சமத்துவபுரத்தில் குடியிருந்து வருகிறேன். அசா1 வளர்மதியின் கணவர் கருப்பையா எனது உடன்பிறந்த தம்பி. அசா1 வளர்மதி எனது தம்பியின் மனைவி ஆவார். அவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளது. சாட்சி முருகன் எனது கணவர் ஆவார், ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்னர் இரவு சுமார் 08.00 முதல் 08.30 மணிக்குள் எனது தம்பியின் மகன் விஜய் போன் செய்து அசா1 வளர்மதியை பின்னால் வீட்டுக்காரர்கள் கம்பியால் அடித்து அசா1 ரத்த வெள்ளத்தில் இருப்பதாக தகவல் சொன்னார்கள். நான் தகவல் கிடைத்த எனது கணவர் முருகன் உடன் சம்பவ இடத்திற்கு இரவு 09.00 மணிக்கு வந்து பார்த்தபோது அசா1 இரத்தகாயத்துடன் இருந்தார். அங்கிருந்தவர்களை விசாரித்தேன். அவர்கள் எதிரிகள் பால்பாண்டி, மணியாரம் ஆகியோர்கள் அசா1 யை அடித்ததாக சொன்னார்கள். சம்பவ இடத்தில் அசா1 ன் பிள்ளைகளும், ஊர்க்காரர்களும் இருந்தார்கள். நானும், எனது கணவர் முருகன் அசா1 யை அவரது பிள்ளைகளையும் ஆட்டோ

முலம் மேலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக வேலம்மாள் மருத்துவமனையில் அனுமதித்தோம். வளர்மதி இதுசம்மந்தமாக வழக்கு கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரிகள்தரப்பில் அசா6 யை மறுவிசாரணை செய்ய வாய்ப்பளித்து குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை. இத்துடன் குறுக்குவிசாரணை முடிததுவைக்கப்படுகிறது.**